# 4. பணி உலகினைப் புரிந்துகொள்ளுதல்

## 4.1. பணி உலகம் என்பது என்ன?

பயனுள்ள வாழ்வாதாரப்பணிக் கல்வி அமைந்த, நாணயத்தின் மறுபக்கமே பணி உலகம். இளம் நபர்களின் முன்பு விரிந்துகிடக்கும் பல்வேறு வாழ்வாதாரப்பணி வாய்ப்புகள் அனைத்தையும் உள்ளடக்கியதே பணி உலகம். வாழ்வாதாரப்பணிக்கான தேர்வு வாய்ப்புகள் அந்த இளம்நபர் அறிந்த, அல்லது கேள்விப்பட்ட வாழ்வாதாரப்பணிகள் அளவுக்கான குறுகிய எல்லை வரையறை கொண்டவையாகவே பெரும்பாலும் அமைகின்றன. பணி உலகினைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தல் இளம் வாழ்வாதாரப்பணி தேடுபவரின், தேடுதலுக்கான எல்லைப் பரப்பினை விரிவுபடுத்துகிறது. பணி உலகின் இன்னொரு பரிமாணம் குறிப்பிட்ட ஒரு துறைக்குள்ளாகவே அமைகின்ற வாழ்வாதாரப்பணியோடு இணைந்த அனைத்துக் கூறுகளையும் விவரிக்கிறது. இதில் வாழ்வாதாரப்பணி ஒன்றின் இயற்கூறுகள், முன்னேற்றத்திற்கான வாய்ப்பு நீட்சி, அடிப்படைத்தகுதி வரம்பு, நுழைவு நடைமுறைகள் மற்றும் பலவும் உள்ளடங்கும்.

இளம் நபர்கள், பணி உலகினைப் புரிந்துகொள்ள உதவியாக மூன்று முக்கியச் செயல்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன.

### 4.1.1. பரந்த கூடுதல் நிகழ்வாய்ப்புகள்

வாழ்வாதாரப்பணிக்கான தேர்வு வாய்ப்புகள் அந்த இளம் நபர் அறிந்த அல்லது கேள்விப்பட்ட வாழ்வாதாரப்பணிகள் அளவுக்கான குறுகிய எல்லை வரையறை கொண்டவையாகவே பெரும்பாலும் அமைகின்றன. வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல், இளம் நபர்களுக்கு புதிய கூடுதல் நிகழ்வாய்ப்புகளுக்கான வழியைத் திறந்துவிடுவதுடன் வாழ்வாதாரப்பணி தேடுதலுக்கான எல்லைப் பரப்பினை விரிவுபடுத்துகிறது. இதில் வாழ்வாதாரப்பணி தேர்ந்தெடுப்பவர், உள்ளூர், தேசிய மற்றும் பன்னாட்டளவிலுமான வாழ்வாதாரப்பணியில் முன்னேற்றத்துக்கான நிகழ்வாய்ப்புகளின் சிறப்புத் தன்மைகளைப் புரிந்துகொள்ள உதவுவதும் அடங்கும்.

### 4.1.2. வாழ்வாதாரப்பணித் தகவலின் உட்கூறுகள்

வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல், இளம் நபருக்கு ஒரு குறிப்பிட்ட வாழ்வாதாரப்பணியினுள் நுழைவதெப்படி மற்றும் அந்தப் பணியிலேயே முன்னேறுவது எப்படி என்பது பற்றியும் வழிகாட்டுகிறது. இதில் வாழ்வாதாரப்பணி ஒன்றின் தன்மைகள், முன்னேற்றத்துக்காக அது வழங்கும் கூடுதல் வாய்ப்பு, பணியில் நுழைவதற்கான அடிப்படைத்தகுதி வரம்பு, நுழைவு வழிமுறைகள் மற்றும் பலவும் உள்ளடங்கும். வாழ்வாதாரப்பணித் தகவல் குறிப்பு ஒன்றின் முக்கிய உட்கூறுகள் குறித்த ஒரு கண்ணோட்டத்தினை கீழ்க்காணலாம்.

வாழ்வாதாரப்பணித் தகவல் குறிப்பு கீழ்க்காணும் தலைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- வாழ்வாதாரப்பணியின் பெயர்
- வாழ்வாதாரப்பணி குறித்த சிறு வரையறை விளக்கம்
- வாழ்வாதாரப்பணிக்குத் தேவையான முக்கிய உள்ளாற்றல் பகுதி பற்றிய ஒரு கருத்துக் குறிப்பு
- வாழ்வாதாரப்பணியில் நுழைவது மற்றும் முன்னேறும் பாதை
- வாழ்வாதாரப்பணி பெறும் எதிர்கால நல்வாய்ப்புகள்
- வாழ்வாதாரப்பணிபெறுவதற்கு வழிவகுக்கும் படிப்புப் பிரிவுகள் குறித்த தகவல்கள்

வாழ்வாதாரப்பணிகளுக்குக் குறிப்பிட்ட சில பயிற்சித் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட சில திறமைகளும், விருப்பார்வங்களும் தேவையென்பதை இளம் நபர் உணரவேண்டும். வாழ்வாதாரப் பணி தேடுபவரின் சுயவிவரத் தொகுப்பினுள் வாழ்வாதாரப்பணிகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதென்பது பணி உலகினைப் புரிதலில் சிரமமான ஒரு பகுதியாகும்.

### 4.1.3. வாழ்வாதாரப்பணி விருப்பார்வம் மற்றும் தொழில்சார் முன்னுரிமை

முந்தைய பகுதிகளில் நாம் ஏற்கெனவேயே விவாதித்து ஆய்ந்தவாறு, விருப்பார்வம் என்னும் கருத்தாக்கமே வாழ்வாதாரப்பணி வழிகாட்டலின் மையக்கருத்தாக விளங்குகிறது. எனினும், பணி உலகம் தொடர்பான பின்னணியில் விருப்பார்வம் உணர்த்தும் பொருள் குறித்து வழிகாட்டுநருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையில் ஒரு தவறான புரிதல் ஏற்படலாம். 'நீங்கள் எதில் விருப்பார்வம் கொண்டிருக்கிறீர்கள்?' என ஒருவரிடம் கேட்டால், அவர் /அவள் எந்த வாழ்வாதாரப்பணியில் ஆர்வம்கொண்டிருக்கிறாரெனக் கேட்கப்படுவதாகப் புரிந்துகொள்ளலாம். வாழ்வாதாரப்பணி வழிகாட்டுநர், வாழ்வாதாரப்பணி மீதான விருப்பார்வம் தனிநபரின் ஆளுமையோடு மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட உளவியல் கோட்பாட்டைக் குறிக்கிறதென்பதை அறிந்துகொள்வது மிக முக்கியமானதாகும்.

ஒரு தனிநபரின் கவனத்தை ஈர்க்கின்ற செயல்கள், அத்தனிநபர் வியப்பார்வம் கொள்ளும் விஷயங்கள், அவர் மேலும் மேலுமாகத் தொடர்ந்து செயல்படுத்த விரும்பும் விஷயங்கள், மிக்க மதிப்பு கொண்டவையென அவர் கருதும் செயல்கள், மற்றும் அவர் மகிழ்ச்சியோடு அனுபவித்து செய்கின்ற செயல்கள் அனைத்தும் வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்களாகும். இந்த வரையறைக்குள், குறிப்பிட்ட அடிக்கருத்துகளைச் சுற்றி அமைகிற விருப்பு வெறுப்புகள் மற்றும் புறக்கணிப்புகளின் படிவ மாதிரிகளே வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்கள் அவதுடன் அவை குறிப்பிட்ட தொழில்களை நோக்கி என்றில்லாமல், குறிப்பிட்ட சில வகையான செயல்களை நோக்கியவையாகவே அமைகின்றன. வாழ்வாதாரப்பணி ஒன்றின் மீதான ஆர்வம் தொழில்சார் முன்னுரிமை என்பதாகவே வரையறுக்கப்படுகிறது. இது வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்களிலிருந்தும் மாறுபட்டது. குறிப்பிட்ட ஒரு தொழில் மீதான தனிநபரின் ஈர்ப்பில் தொழில்சார் முன்னுரிமைச் சாய்வுகள் பிரதிபலிக்கப்படுகின்றன. எனவே தனிநபர் ஒருவர், தனக்கு வணிக முக்கியத்துவம் சார்ந்த கலையில் ஆர்வமிருப்பதாகக் கூறும்போது, அவர் தொழில்சார் முன்னுரிமை ஒன்றைத் தெரிவிக்கிறாரென்பதே பொருள். அதற்கு மாறாக, அவர் வரைதல், வண்ணந்தீட்டுதல், வடிவமைத்தல் மற்றும் காட்சிப்படுத்தல் தேவைப்படுகின்ற வாழ்வாதாரப்பணி ஒன்றில் ஆர்வமிருப்பதாகக் கூறுவாரெனில் அவர் வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்களைத் தெரிவிப்பவராகிறார்.

வாழ்வாதாரப்பணி வழிகாட்டல் திட்டங்கள், வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்களை சீர்தூக்கிப் பார்ப்பதுடன் தனிநபர் முன்னுரிமை அளிக்கின்ற செயல்கள் அடிப்படையில் அத்தகைய செயல்கள் அமைந்த தொழில்களை நோக்கி அவரைச் செலுத்துகின்றன. செயல் பகுதி ஒன்றில் தனிநபர் குறைவான ஆர்வம் காட்டுவாரெனில் அத்தகைய செயல்கள் தொடர்பான தொழிற்பணிகளிலும் குறைவான ஆர்வத்தையே அவர் வெளிப்படுத்துவாரென்பதும் யூகிக்கத்தக்கதாக அமைகிறது.

வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதலில் நாளும் நிகழ்கின்ற நடைமுறைகளைக் கூர்ந்தறிந்தவற்றில் அடிக்கடி முன்வைக்கப்படுகிற ஆய்வுக்கருத்து ஒன்று, தனிநபர் உறுதியுடன் வெளிப்படுத்திய வாழ்வாதாரப்பணிசார் முன்னுரிமைக்கும், வாழ்வாதாரப்பணி தொடர்பான அளவையில் அவரது விருப்பார்வச் செயல் குறிப்புக்களுக்குமிடையில் நிலவும் ஒத்திசைவுக் குறைவினைச் சுட்டுகிறது. வளர்ந்துவரும் பொருளாதாரங்களிலிருந்து இதற்குப் பொதுவான ஒரு எடுத்துக்காட்டாக, மருத்துவம் மற்றும் பொறியியலில் மிகப் பெரும்பாலான மாணவர்கள் மிகுதியான ஆர்வம் காட்டுவதாக அமைகிறது. இந்த மாணவர்களின் வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்கள் (இவ்வகைப்பட்ட தொழில்கள் தொடர்பான செயல்களின் மீதான ஆர்வம்) குறித்த மதிப்பீடு, அவர்களின் தொழில்சார் முன்னுரிமைக்கும் வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்களுக்கிடையிலுமான ஒத்திசைவுக் குறைவினையே பெரும்பாலும் வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, மருத்துவராகப் பணியாற்றும் தொழில் மீது உயர் மதிப்பு கொண்டிருப்பினும், அத்தொழிலுக்கு மையமான சில செயல்கள் மீது குறைவான மதிப்பே செலுத்தப்படுகிறது : தொற்று ஏற்பட்ட காயங்களைச்

சுத்தம்செய்தல், வேதனையில் துடிப்போருக்காகப் பணிசெய்வது. அதுபோலவே, பொறியியல் தொழில் மீது உயர் மதிப்பு வெளிப்படுத்தினாலும், அத்தொழிலுக்கு மையமான சில பணிகள் மீது குறைவான மதிப்பினையே வெளிப்படுத்துவது: இயந்திரங்களில் பணிசெய்வது, இயந்திரவியல் காரண காரிய அறிவைப் பயன்படுத்துவது. இதையே வேறு வகையில் குறிப்பிடுவதானால், குறிப்பிட்ட தொழிற்பணி ஒன்றின் மீது கொள்கிற உயர்மதிப்புக்கும் அப்பணி தொடர்பான செயல்கள் மீது கொள்கிற மதிப்புக்குமிடையில் ஒத்திசைவு இருப்பது அல்லது இல்லாமலிருப்பதை, வாழ்வாதாரப்பணி வழிகாட்டல் பெறாத ஒருவர் அந்தத் தொழில்களுக்கான கல்விப்பாதைகளுக்குள் நுழைந்த பின்னரே உணர்வார்.

### 4.1.4. பணி எதிர் வாழ்வாதாரப்பணி

வளர்ந்துவரும் பொருளாதாரங்களில், வேலையில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகக் கடந்த இரு பத்தாண்டுகளில் பெருமளவு அதிகரித்துள்ள பணி வாய்ப்புகள் அமைகின்றன. இந்த நிகழ்வு, புற ஒப்படைப்பு (outsourcing) என்னும் நவீனப் பொருளாதாரக் கொள்கையில் தோற்றம் கொண்டதாகும். சரக்கு மற்றும் சேவை வர்த்தகத்தைப் பன்னாட்டு எல்லைகள் வரையிலும் நீடித்துப் பரவலாக்கிய நடைமுறை வழக்கம் மிகப் பழங்காலத்திய ஒன்று. இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக, சீனா, ஆப்பிரிக்க - யுரேசிய நிலப்பகுதி மற்றும் ஆசியாவினை ஐரோப்பாவோடு இணைத்த சுமார் 4,000 மைல்கள் தூரத்திற்கு நீண்டிருந்த பட்டு வழிப்பாதை (Silk Route) என்ற வணிக வழிப்பாதைகளின் வலைப்பின்னல் திகழ்கிறது. உள்ளூரில் கிடைக்கப்பெறாத சரக்குகளை விற்பதிலும் வாங்குவதிலும் பாரம்பரிய வர்த்தகம் கவனம் செலுத்திய போது, சமகால, உலகமய, பன்னாட்டு வர்த்தகத்தின் முக்கிய அம்சமாக விளங்கித் தெரிவது, அதிக அடக்கவிலைப்பயன் கொள்ளும் விதமாக வணிக வாய்ப்புகளைத் தேடுதலாகும். எனவே, முழுமையாக உலகமயமாக்கப்பட்ட இவ்வுலகில் சரக்கு மற்றும் சேவை வர்த்தகம், உள்ளூரில் கிடைக்காமையால், மட்டுமில்லாமல் வேறு இடங்களில் கொள்முதல் செய்வது மலிவாக இருப்பதாலும் நிகழலாம். இது, உள்ளூர் வேலைக்குழுக்களில் அளவிட இயலாத மிகப்பெருந் தாக்கத்தினை நிகழச்செய்து, சில அமைவிடங்களில் பணி இழப்புகளையும் வேறு சில இடங்களில் முன் எப்போதுமில்லாத அளவுக்குக் கூடுதலான பணி வாய்ப்புகளுக்கும் வழிவகுத்துள்ளது. இந்த வடிவிலான உலகமய வர்த்தகத்திற்குப் பண்பாட்டு நிலையில் சில மறுசீரமைப்புகள் தேவையாகின்றன. பெறுநிலையிலுள்ள (வளரும்) நாடுகளே மறுசீரமைப்பினைச் செய்துகொள்ளவேண்டியிருக்கிறது.

பணி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்திருக்கும் புறஒப்படைப்பு, வாழ்வாதாரப்பணி வாய்ப்புகளை அதிகரிக்கச்செய்யவில்லை. இது ஏனெனில், மையத்தொழில்கள் அனைத்தும் இப்போதும் புற ஒப்படைப்பு செய்யும் நாடுகளிடமே உள்ளன. அதனாலேயே, வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் நமக்கு பணி வாய்ப்புகள் அதிகரிப்பதல்லாமல் வாழ்வாதாரப்பணி வாய்ப்புகள் அதிகரிப்பதில்லை. அந்த பணிகளும் புற ஒப்படைப்பு நாடுகளுக்கு அதிக அடக்கவிலைப் பயனளிக்கும் வரையிலேயே

கிடைக்கும். வேறொரு நாடு இதைவிட அதிகமான அடக்கவிலைப்பயனை அளிக்குமானால், பணிகள் அந்த நாட்டுக்குப் புலம்பெயர்ந்துவிடும். இது மீளவியலாத ஒரு புதிய வேலையின்மை வடிவத்துக்கு இட்டுச்செல்கிறது.

எனவே, வளரும் பொருளாதாரங்களிலுள்ள வாழ்வாதாரப்பணி வழிகாட்டு வல்லுநர்கள், வாழ்வாதாரப்பணி தேடுவோரை பணித் தேர்வுவாய்ப்பு எதிர் வாழ்வாதாரப்பணித் தேர்வுவாய்ப்பின், உட்கிடை மற்றும் விளைவு குறித்துத் தெளிவுபடுத்துவது முக்கியமானதாகிறது.

## 4.2. கல்வித்தகுதிகள் : சான்றுகள், பட்டயங்கள் மற்றும் பட்டங்கள்

### 4.2.1. கல்வித் தகுதிகளின் பொருள் யாது?

சான்றுகள், பட்டயங்கள் மற்றும் பட்டங்கள் கல்வித்தகுதிகளின் வேறுபட்ட வகைகளாகும். `தகுதி பெறுவது` என்பது மூன்று விஷயங்களைக் குறிக்கிறது.

- படிப்புப் பிரிவு ஒன்றில் சேர்ந்து, அதன் பாடங்களைக் கற்றல்
- அறிவினைச் சோதிக்கும் தேர்வு ஒன்றினை எதிர்கொள்ளுதல்
- அத்தேர்வில் வெற்றிபெற்று, அதனை முடித்தல்.

தேர்வுக்குட்படும் தேர்வர் மேற்காண் மூன்று படிநிலைகளையும் வெற்றிகரமாக முடித்துவிட்டால், அவர் /அவள், அந்தப் படிப்புப் பிரிவில் பயிற்சியளிக்கப்பட்ட பாடப்பிரிவுகளில் `தகுதி பெற்றவர்` என அறிவிக்கும் ஆவணம் ஒன்று - சான்று, பட்டயம், அல்லது பட்டம் வழங்கப்படுகிறது.

### 4.2.2. அடிப்படைத் தகுதி

அநேக படிப்புப் பிரிவுகளுக்கும் அடிப்படைத் தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு பாடப்பிரிவுக்கு விண்ணப்பிக்க சில குறிப்பிட்ட கல்வித் தகுதி தேவையென அனைத்துப் பிரிவுகளும் விதிமுறை வகுத்துள்ளன. எடுத்துக்காட்டாக, தானியங்கி இயக்கவியல் பட்டயப் பிரிவில் நுழைய, குறைந்தபட்சம் அறிவியலில் +2 (மேல்நிலை) தேர்வில் வெற்றி பெற்றிருக்கவேண்டும். உளவியலில் முழுநேரப் பிரிவில் முதுகலைப் பட்டப்படிப்பில் சேர, இளங்கலைப் பட்டப்பிரிவில் உளவியல் கற்றிருக்கவேண்டும்.

### 4.2.3. பட்டப் படிப்புகள் எதிர் தொழில்சார் படிப்புப் பிரிவுகள்.

படிப்புப்பிரிவு ஒன்றின் பாடங்கள் கோட்பாடு சார்ந்ததாகவோ, செய்முறை சார்ந்ததாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கலாம். தொழில்சார் படிப்புப் பிரிவுகள் கோட்பாடு சார்ந்ததை விடவும் அதிகமாக செய்முறை சார்ந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வகைக் கல்வித்திட்டங்களின் தலைமை நோக்கம், மாணவர்கள் பணியை எவ்வாறு செய்ய வேண்டுமெனக் கற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதாகும். தொழில்சார் படிப்புப் பிரிவுகள் தொழிற்பயிற்சி மையங்களாலும், பாலிடெக்னிக் எனப்படும் தொழில்நுட்பப் பயிலகங்களாலும் நடத்தப்படுகின்றன.

பட்டப்படிப்புப் பிரிவுகள் அதிகமும் கோட்பாட்டுச் சார்புடையனவாக உள்ளன. அவை தொழிற்கல்வி சார்ந்ததாகவோ சாராததாகவோ அமையலாம். தொழிற்கல்விப் பட்டங்கள், மாணவர்களைக் குறிப்பிட்ட ஒரு தொழிற்பணிக்குத் (எ.கா. நூலக அறிவியல், பொறியியல், மருத்துவம்.) தயார்படுத்துகின்றன. இருப்பினும் அநேக தொழிற்கல்விப்

பட்டப் பிரிவுகளும், மாணவர்கள் மேற்படிப்புக்குச் செல்லவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துவனவாகவே உள்ளன. தொழிற்கல்வி சாராத பட்டக் கல்வி, ஒரு பாடப்பிரிவு தொடர்பான மாணவர்களின் அறிவினை மேற்கொண்டும் அகல/ஆழப்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது (எ.கா, இளங்கலை, இளங்கலை அறிவியல்).

தொழிற்கல்விப் பிரிவுகள் இதர பிரிவுகளைவிடத் தாழ்ந்தவையெனச் சிலர் நினைக்கின்றனர். இதில் சிறிதும் உண்மை இல்லை. உண்மையில் தொழிற்கல்விப் படிப்பு முடித்த மாணவர்களின் தேவை அதிகரித்துள்ளது. தொழிற்கல்விப் பட்டப் பிரிவு முடித்த மாணவர் முதுநிலைக் கல்விக்கும் அதற்கு மேலும் உயர்கல்வி பெறுவதற்குமான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன.

பல்கலை பாடக்கல்வி சார்ந்து இயங்குவதில் குறைவான விருப்பமுள்ளவர்கள் அல்லது விரைவிலேயே வருமானம் ஈட்டும் விருப்பமுள்ளவர்கள் தொழிற்கல்விசார் பிரிவுகளில் சேருவது பற்றிச் சிந்திக்கலாம். நீண்டகாலக் கல்விக்கான தயாரிப்பிலுள்ளவர்களும், நிறுவனக்கல்விப் பணியில் மகிழ்ச்சிகொள்பவர்களும் இதர பட்டப் படிப்புகள் குறித்துச் சிந்திக்கலாம்.

### 4.2.4. கல்வித் தகுதிகளின் படிநிலைகள்

***சான்றுகள்:***
சான்றுப் படிப்புகள் வழக்கமாகவே, கோட்பாடுசார்ந்த கல்வி குறைவாகவும், செய்முறைக் கல்வி அதிகமாகவும் கொண்டவை. அவற்றுக்கு அடிப்படைத் தகுதியாகக் கல்வியில் குறைந்த நிலையே நிர்ணயிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 8 ஆம் வகுப்புத் தகுதியோடு கூட சான்றுப் பிரிவுகள் உள்ளன. சான்றுகள் பொதுவாக ஐ.டி.ஐ. எனப்படும் தொழிற்பயிற்சி மையங்களால் வழங்கப்படுகின்றன. சில உயர் மட்டச்சான்றுப் படிப்புகள், குறைந்தபட்சம் பட்டப்படிப்பினை அடிப்படைத் தகுதியாக நிர்ணயித்துள்ளன.

***பட்டயங்கள்:***
பட்டயங்கள் சான்றுகளை விடவும் உயர்நிலை கொண்டவை. இது கல்வித் தகுதியில் அடுத்த நிலையாகிறது. பட்டயப் படிப்புகள் வழக்கமாகவே நீண்டகாலப் படிப்புகளாகவும் சான்றுப் படிப்புகளைவிடவும் சிறிது அதிகமாகக் கோட்பாடுசார்ந்ததுமாக உள்ளன. இந்தியாவில், சிறந்த பல பட்டயப்படிப்புகளுக்கும் +2 மேல்நிலைக்கல்வித் தேர்ச்சி குறைந்தபட்ச தகுதிநிலையாக உள்ளது. இந்தப் பட்டயங்கள் பாலிடெக்னிக் எனப்படும் தொழில்நுட்பப் பயிலகங்களால் வழங்கப்படுகின்றன. சான்றுகளைப் போலவே பட்டயங்களும் உயர்நிலையில் வழங்கப்படும் பட்டயங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, முதுநிலைப் பட்டயங்களுக்கு, தேர்வர் ஏற்கெனவே பட்டப்படிப்பில் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும்.

***பட்டங்கள்:***

மாணவர் ஒருவர் உயர்நிலையில் பெறக்கூடிய தகுதி பட்டங்களே. பட்டங்கள் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படுகின்றன. கல்லூரி வழங்குகிற பட்டமெனில், அக்கல்லூரி பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே செல்திறனுடையது. வேறுபல படிநிலைகளிலும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

- இளங்கலைப் பட்டம்: இதுவே முதல் பட்டமென அழைக்கப்படுகிறது. இது ஒரு மூன்றாண்டுப் படிப்பு..
- முதுகலைப் பட்டம்: பட்டப் படிப்பு நிலையில் அடுத்த நிலையான இது இரண்டாவது பட்டமென்றும் அழைக்கப்படுகிறது. முதுகலைப் படிப்புகள் பொதுவாக இரண்டு ஆண்டு காலத்துக்கானவை.
- முனைவர் பட்டம்: இதுவே உயர்நிலைப் பட்டம். தத்துவ நிபுணர் என்னும் பொருள்கொண்டது. இப்பட்டத்தை வென்றவர்கள், தமது பெயரின் முன்னதாக முனைவர் (Dr.) என்னும் சிறப்பு அடையினைப் பயன்படுத்திக்கொள்ளலாம். முனைவர் பட்டப் படிப்புகள் மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்குள் முடிவுபெறுகின்றன.

முதுநிலைப் பட்டத்துக்கும் முனைவர் பட்டத்துக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள பட்டம் இளம் ஆய்வியல் அறிஞர் என்னும் எம்.ஃபில் பட்டமாகும். இது பொதுவாக, கோட்பாடு, ஆய்வியல் மற்றும் செய்முறை கலந்ததாக, மாணவரை முனைவர் பட்ட ஆய்வியலுக்குத் தயார்படுத்துவதாக உள்ளது.

### 4.2.5. அங்கீகாரம்

நீங்கள் பெறும் சான்று, பட்டயம் அல்லது பட்டம் விரிவான அங்கீகாரம் பெற்றதாக அமையவேண்டும். மிகக் குறைந்த நிலையிலெனில், அந்த ஆவணத்தை அளித்த நிறுவன அளவில் அங்கீகரிக்கப்பட்டதாக அமையும். அதற்கு அடுத்த படிநிலையென்பது, அது, குறிப்பிட்டதொரு வட்டார அளவினதாகிலும் அங்கீகாரம் பெற்றதாக அமையும். நல்லதொரு சான்று, பட்டயம் அல்லது பட்டமெனில் குறைந்த அளவிலென்றாலும் அந்த நாடு முழுவதிலுமாவது அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இதன் பொருள், படிப்புப் பிரிவுகள், மதிப்புச் சான்று வழங்கும் வாரியமொன்றால் ஆய்வுசெய்து மதிப்பிடப்படுகின்றன என்பதாகும். மிகமிகச் சிறந்த சான்று, பட்டயம் அல்லது பட்டங்கள் உலக முழுவதிலும் அங்கீகாரம் பெறுவதாக அமைகின்றன.

## 4.3. வாழ்வாதாரப்பணித் தகவல் ஆதாரங்கள்

தொழிலாளர் சந்தைத் தகவல்களையோ அல்லது வாழ்வாதாரப்பணித் தகவல்களையோ திரட்டுவதற்கும் பரப்புவதற்குமாக இந்தியாவில் மத்திய அல்லது மாநில அளவில் பணிக்கப்பட்ட எந்தவொரு அமைப்பும் இல்லை. வாழ்வாதாரப்பணித் தகவல்களைத் திரட்டி, தரவு வங்கியாக நிர்வகிக்க வேண்டியது வாழ்வாதாரப்பணி வழிகாட்டுநரின் பொறுப்பாக அமைகிறது. தகவல் ஆதாரங்களில் கீழ்க்காணும் சிலவும் உள்ளடங்கும்.

### 4.3.1. நாளிதழ்கள்

கல்விச் சேர்க்கை விளம்பரங்கள், நுழைவுத் தேர்வு விவரங்கள், கொள்கை விளக்கங்கள் அனைத்தும் தேசிய நாளிதழ்களின் தொழிற்பணிப்பத்திகள் மற்றும் கல்விச் சிறப்பிணைப்பு மலர்களில் வழக்கமாக வெளிவருகின்றன. பெரும்பாலான உள்ளூர், வாழ்வாதாரப்பணித் தகவல்கள் அந்தந்த வட்டாரச்செய்தி இதழ்களிலேயே கிடைக்கின்றன.

### 4.3.2. வார, இருவார, மாத இதழ்கள்

ஒரு சில வார, மாத இதழ்கள் முழுமையாகத் வாழ்வாதாரப்பணித் தகவல்கள் மற்றும் வாழ்வாதாரப்பணி முன்னேற்ற விஷயங்களுக்கெனவே வெளிவருகின்றன. எடுத்துக்காட்டுகளில் **“கெரியர்ஸ் 360”, “கெரியர்ஸ் எண்ட் கேம்பசஸ்”** போன்றவையும் அடங்கும். அநேகமாக, அனைத்துக் குடும்ப மற்றும் இளைஞர் இதழ்களிலுமே வாழ்வாதாரப்பணித் தகவல்களுக்கென ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது.

### 4.3.3. கல்லூரித் தகவல்

கல்லூரித் தகவலேடு, குறிப்பிட்ட சில பயிலகங்கள் தொடர்பான தகவல்களை முழுமையாகத் தருகின்றன. கல்லூரிகளுக்கு நேரடியாக எழுதுவது மற்றும் முன்னாள் மாணவர்களிடமிருந்து தகவல் திரட்டுவது மூலம் சிறப்பு முயற்சியுள்ள வாழ்வாதாரப்பணி தேடுபவர், குறிப்பிட்ட கல்லூரி பற்றிய சிறப்புத் தகவல்கள் அனைத்தையும் பெற்றுவிட இயலும். வாழ்வாதாரப்பணிக் கல்வி வழிகாட்டுநர் நேரடியாகக் கல்லூரிகளுக்கு எழுதுவது மற்றும் கல்லூரிகளின் அனுப்புகை முகவரிப் பட்டியலில் தன்னையும் இணைத்துக்கொள்ளுமாறு கோருவதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள இயலும்.

### 4.3.4. இணையம்

பெரும்பாலான முன்னணிக் கல்லூரிகளும் இணையத்தில் தமக்கென சொந்த வலைத்தளங்களைக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட கல்லூரி தொடர்பான மிகத்துல்லியமான தகவல், அக்கல்லூரி வலைத்தளத்திலேயே கிடைக்கும். இருப்பினும் அவ்வலைத்தளம், எப்போது கடைசியாகப் புதுத்தகவலேற்றப்பட்டதெனச் சரிபார்த்துக்கொள்வது பொருத்தமானது. இணையமும் சிறப்புவாய்ந்த வாழ்வாதாரப்பணி வலைத்தளங்களைத் தருகிறது. எனினும் இந்த வலைத்தளத் தகவல்களை மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் கூர்ந்து ஆராய வேண்டும். ஏனெனில் இத்தகைய தகவல்களின் உண்மைத்தன்மை எப்போதுமே, கேள்விக்குரியதாகவே உள்ளது.

## வகுப்பீடு

**இந்த அலகு பற்றிய உங்கள் சுய கற்றலை முடிப்பதற்கான இறுதி படி ஒரு எளிய வகுப்பீட்டை சமர்ப்பிப்பதாகும்.**

- **கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்க. நீங்கள் வகுப்பீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்**
- **வகுப்பீட்டின் முடிவில் Submit பொத்தானைக் கிளிக் செய்க. உங்கள் பதில்கள் தானாக எங்களுக்கு வந்துசேரும்**
- **அடுத்த அலகுக்குச் செல்லவும்.**
- **நீங்கள் எங்களிடமிருந்து மதிப்பீட்டைப் பெறுவீர்கள்**

**Link:** https://forms.gle/43Ucjbb7Koj9PoMU9

**முக்கியம்:** நீங்கள் 7 வகுப்பீடுகள் அனைத்தையும் நேருக்கு நேர் மெய்நிகர் பயிற்சிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.